கண்டி மாநகர சபை
கண்டி மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும்நகரபிதாவிற்கு அனுப்பப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கண்டி மாநகர சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டினுள் ரூபா 1,310,256 பெறுமதியான கடன்கொடுனர் மீதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுனர் மீதியை சரியாக இனங்கண்டு கணக்கிடவேண்டும். | சரியான தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 111,850 ஆன தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஜர்னல் குறிப்பினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | ஸ்ரீ ராஜசிங்ஹ மாவத்தையை இணைக்கும் பாதையை அபிவிருத்தி செய்யும் வேலையின் இறுதி பட்டியல் தொடர்பான கடன்கொடுனர் பெறுமதி ரூபா 147,337 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | பட்டியல் படி, ஆணடிறுதி வேலை கடன்கொடுனர் பெறுமதியை சரியாாக கணக்கீடு செய்ய வேண்டும். | இது தொடர்பாக கண்டறிந்து சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் விளம்பரப் பலகை வருமானம் ரூபா 17,654,095 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2018.12.31 திகதிக்குரூபா 27,781,732.38 தொகையொன்று கிடைக்க வேண்டியதாக இருந்தது. |
| (உ) | மீளாய்வாண்டில் 877 கடையறைகளிற்கான வருமானம் ரூபா 2,478,869 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | கடையறை வருமான பில்லிடலை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | குறித்த தகவல்களை கண்டறிந்து சீராக்கம் செய்து சரியான பதிலொன்றை கணக்காய்விற்கு முன்வைக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஆண்டினுள் மேற்கொள்ளப்படாத 03 வேலைகளில் ரூபா 11,812,087 ஆன மீதியொன்று கடன்கொடுனராக கணக்கிடப்பட்டிருந்தது | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கருத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | 08 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக் கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும்அட்டவணைப்படியான மீதிகளிற்கிடையில்ரூபா 82,809,745 ஆன வித்தியாசம் நிலவியது. | மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். | பதில் பின்னர் வழங்குவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் நீர் கைத்தொழிற் பிரிவில் நானாவித கடன்கொடுனர் மீதி மற்றும் கணக்கு பிரகார கடன்கொடுனர் மீதிக்கிடையில் ரூபா 16,886,927 ஆன வித்தியாசம் நிலவியது. | கடன்கொடுனர் மீதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | சரியான தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | கல், மெடல், பிரீமிக்ஸ் களஞ்சிய கடன்கொனர் பதிவேட்டு பெறுமதியும் கணக்கு பிரகார பெறமதிகதுமிடையில் ரூபா 206,882 ஆன வித்தியாசம் நிலவியது. | களஞ்சிய கடன்கொனர் பதிவேடு மற்றும் கணக்கு பிரிவின் தகவல்கள் இணங்கும் வகையில் நடாத்தப்பட வேண்டும். | சரியான தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | கணனி மென் பொருள் பிரகாரம், நீர் விற்பனை வருமானம் மற்றும் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம், அவ்வருமானத்திற்கிடையில்ரூபா 5,785,325 ஆன வித்தியாசம் நிலவியது. | சரியான வருமானத்தை இனங்காண வேண்டும். | சரியான பதிலொன்றை கணக்காய்விற்கு சமர்பிக்கிறேன். |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கணக்குகள் | | |
| | 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்றை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 200,662,489 ஆனது. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | இந் நிலுவை 10 ஆண்டுகளை விஞ்சிய காலமாக தொடர்ந்து நிலவி வரும் மீதியொன்றாகும் என அறிவிக்கிறேன். |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்றை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 414,926,972 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | பண்டங்களை வழங்காத கட்டளைகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களிலிருந்து தகவல் அறிந்து |

| | | |
|---|---|---|
| | | கட்டளையை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அட்டவணைகள், பண்டக கணிப்பீட்டறிக்கை போன்ற தேவையான தகவல்களை சமர்பிக்கப்படாததால், கூட்டுத் தொகை ரூபா 1,628,738,650 ஆன 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | களஞ்சியபடுத்தல் தொடர்பானசிக்கல்கள் மற்றும் மனிதவள பற்றாக்குறை பிரகாரம், பண்டக கணிப்பீட்டு நடவடிக்கைகளை நிரைவு செய்ய முடியவில்லை. |

1.4 இணங்காமை

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபணவிதிக் கோவை | | | |
| XV ஆம் அத்தியாயம் 10.1.1 பிரிவு | வெளிநாட்டு பிரயானத்தை நீடிப்பதற்கு உரிய அங்கீகாரத்தை காலதாமதமின்றி பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், மா நகர சபை இரண்டு அலுவலர்கள் குறித்த அங்கீகரத்தை பெற்றுக்கொள்வற்கான விண்ணப்பத்தை வெளிநாட்டு பிரயானத்தை சென்று வந்ததன் பின் செய்துள்ளனர். | தாபண கோவையின் குறித்த பந்திக்கி இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெளிநாட்டு விடுமுறை நீடிப்பிற்கான அங்கீகரத்திற்கு சமர்ப்பித்த கடிதத்தின் பிரதியொன்றை இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) 2003 செப்தம்பர் 05 திகதிய 1304/18 ஆம் இலக்க அதிவிஷேட | கடுகஸ்தொட்ட புதிய நீர் குழாய் புதைக்கும் | வர்தமானி பிரகாரம், சரியாக | வேறு மூன்று சுவாதீன நபர்கள் குழுவில் அங்கத்தவர்களாக |

| | | | |
|---|---|---|---|
| வர்த்தமானி iv(அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட கண்டி மாநகர சபை துணை விதி iii பிரிவு, 04 ஆம் பந்தி. | கருத்திட்டத்தின் மதிப்பீடு/ அளவுத்திட்டம் தயாரித்த மற்றும் பரிந்துரைத்த இரு அலுவலர்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கபட்டிருந்தமையால், குழுவின் சுவந்திரம் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த குழுவிற்காக அலுவலரகள் நியமிக்கப்பட வேண்டும். | செயற்பட்டுள்ளனர். |

1.4.2 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 26,134,498 ஆன வழங்கள் கடன் கொடுனர் பெறுமதியொன்று அங்கீகாரமின்றி ஜர்னல் குறிப்பினூடாக கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | ஜர்னல் குறிப்பு சீராக்கம் உரிய அங்கீகாரத்தின் கீழ் செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாக தகவல்களை கண்டறிந்து அறிக்கையிடுகிறேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 586,748,840ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 520,473,900 ஆனது.

2.2 நிதி கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் நடைமுறை கணக்கிற்கு 35 சந்தர்ப்பங்களில், வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,202,458 பெறுமதியான காசோலைகள் மாற்றப்படாமை மற்றும் 14 சந்தர்ப்பங்களில் கிடைத்த ரூபா 294,043 ஆன இனங்காணப்படாத வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாற்றப்படாத காசோலைகள் மற்றும் இனங்காணப்படாத வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த தகவல்களை கண்டறிந்து உரிய சீராக்கம் செய்து, இது தொடர்பாக பதிலொன்றை முன்வைக்கிறேன். |
| (ஆ) | பாதைகளில் வாகனங்களை நிறுத்தும் கட்டணத்திற்காக 11 சந்தர்ப்பங்களில், கிடைத்த ரூபா | ஒப்பந்தம் பிரகாரம் பணம் அறவிட வேண்டும். | சில காசோலைகளை மாத்திரம் தாமதித்து வழங்கியதுடன் |

| | | |
|---|---|---|
| 14,445,000 பெறுமதியான காசோலைகள் குத்தகை நிறுவனத்தின் ஒரு அலுவலர் மாத்திரம் கையொப்பமிட்டு, முற் தினமொன்றை இட்டு வழங்கிருந்ததுடன், சபை அக்காசோளையை மறுக்காது, பொறுப்பேற்றிருந்தது. | | தாமதத்திற்காக தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. |

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 878,245,000 | 731,472,381 | 634,109,151 | 252,948,621 | 839,543,000 | 951,640,588 | 821,071,501 | 285,599,883 |
| ii | வாடகை | 123,276,000 | 119,538,223 | 112,010,789 | 74,296,012 | 116,533,000 | 65,179,198 | 67,087,038 | 62,046,007 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 51,854,100 | 46,569,841 | 46,568,941 | - | 46,495,000 | 31,227,877 | 31,227,877 | - |
| iv | ஏனைய வருமானம | 615,797,000 | 607,869,047 | 484,052,597 | 806,186,283 | 576,462,000 | 476,941,161 | 322,459,698 | 424,389,671 |
| | கூட்டுத் தொகை | 1,669,172,100 | 1,505,449,519 | 1,276,741,478 | 1,133,430,916 | 1,579,033,000 | 1,524,988,824 | 1,241,846,114 | 772,035,561 |

2.3.2 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொத்த வருமான மூலங்களில் 2017 திசெம்பர் 31 திகதிக்கு நிலவிய நலுவை ரூபா 772,035,561 ஆனதடன், மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு அப் பெறுமதி ரூபா 1,133,430,916 ஆன காரணத்தால், நிலுவை வருமானத்தின் முன்னேற்றம் 47 சதவீமானது. | நிலுவை வருமானம் முன்னேருவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதில் பின்னர் வழங்குகிறேன். |

2.3.3 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

(அ) வீத வரி

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு பில்யிடல் ரூபா | வீத வரி சேர்க்கும் | நிலுவை வருமானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | 323,328,933 ஆன போதும், அவற்றிளிருந்து ரூபா 194,358,480 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | முன்னேற்றத்தை அதிகரித்திற்கொள்ள வேண்டும். | 2019 ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | காணி வரி | | |
| | வருட ஆரம்பத்தில் நிலவிய ரூபா 33,063,413 ஆன காணி வரி நிலுவையிலிருந்து ஆண்டினுள் ரூபா 31,188,223 அல்லது 94 சதவீதத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை காணி வரி அறவிடும் முன்னேற்றத்தை அதிகரித்திற்கொள்ள வேண்டும். | வரி செலுத்தலை புறக்கணிப்பதன் கரணமாக, நிலுவை காணப்படுவதுடன், இது வரை கனிசமான முன்னேற்றமொன்று உள்ளது. |
| (இ) | நீர் வரி | | |
| | மீளாய்வாண்டு ஆகஸ்ட் 31 திகதிக்கு ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவை மீதி நிலவிய 31 வாடிக்கையாளர்களிடமிருந்து மாதம் 01இற்கும் 123 இற்கும் இடையிலான கால வீச்சிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 11,976,307 இனை அறவிட்டிருக்காததுடன், பட்டியல்கள் நிலுவையாக இருக்கையிலும், நீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நீர் கட்டணம் செலுததாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காயவினால் சுட்டிக் காட்டியதன் பின்னர் நிலுவை மீதியை பரிசீலிக்கக் கூடிய வகையில் நீர் பிரிவின் வேலைகளை முறையாக்கியுள்ளதுடன், நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

2.3.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடை வாடகை | | |
| | கண்டி புகையிரத நிலைய பாதையில் எஸ்.டப்லிவ்.ஆர்.டி.பண்டாரநாயக்க மாவத்தையில் கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 22,055,500 ஆன முக்கிய பணத் தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முக்கிய பணத் தொகை அறவிடப்பட வேண்டும். | நிலுவை கட்டணத்தை செலுத்தாத கடையறைகளை முத்திரையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பாக முன் நடவடிக்கை செய்யப்படுகிறது. |
| (ஆ) | வீட்டுக் வாடகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீட்டுக் கூலி மீதி ரூபா 1,177,717 ஆனதுடன், அவற்றின் 2003 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரை யான காலத்திளிலிருந்து நிலுவையான மீதி ரூபா 1,026,259 ஆனது. | நிலுவையாக உள்ள வீட்டக் கூலி அறவிடப்பட வேண்டும். | பதில் பின்னர் வழங்குமாறு அறிவிக்கிறேன். |

2.3.5 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 12,733,266உம்,ரூபா 272,828,257 உம் ஆனது. | நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட வேண்டும். | நிலுவையிலிருந்து பங்கொன்று கீடைத்திருந்ததுடன், எஞ்சியா தொகையை அழைப்பித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) மேற்கொள்ளப்படாத வேலைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கழிவுப் பொருள் முகாமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயோ கேஸ் கருத்திட்டத்திற்காக ரூபா 3,000,000 ஆன தொகையொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், கருத்திட்த்தை நடைமுறைப்படுத்திருக்கவில்லை. | செயல்களை ஆண்டினுள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுகாதார ரீதியான நிளங்களை நிரப்புவதற்கு நிதி ஒதுக்கீடு பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்படாததன் மீது அப் பணம் நிளங்களை நிரப்புவதற்கு ஈடுபடுத்தப்பட்டது. |
| (ii) | செயல் திட்டத்தின படி, நகரன் வளிமண்டல மாசு நிலையை இனங்காணுவதற்கு அளவு உபகரண தொகுதியொன்றை நிருவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், அதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆண்டினுள் செயற்பட திட்டமிடப்பட்ட செயல்கள் மேற்கொள்ள வேண்டும. | ரூபா 20,000,000 யிற்கு மேற்பட்ட தொகையொன்று செலவாகுவதுடன், சபைக்கு அவ் ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ள முடியாததன் மீது மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் தொடர்புபட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ)** கழிவுப் பொருள் முகாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2014 ஆண்டின் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் சபைக்கு வழங்கியிருந்த கொள்ளளவு லீட்டர் 150-200 ஆன பொலிதின் கழிவு பொருட்கள் தின்மமாக்கும் கம்பெக்டர் இயந்திரம் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமமான வளங்களின் உச்ச பயன்பாட்டை பெற வேண்டும். | குறித்த வளவின் இடவசதி மட்டுபாட்டினை, கருத்திற் கொண்டு இவ்வியந்திரத்தை பொலிதீன்தின்மமாக்கழுக்கு ஈடுபடுத்தப்படவில்லை. |
| (ii) | 26,722 வீட்டு அலகுகளுக்காக கொம்பேஸ்ட் பெரல் விநியோகிக்க ரூபா 7,000,000 ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டில் ரூபா 1,635,650 செலவில் 470 பெரல்கள் மாத்திரம் கொள்வனவு செய்து விநியோகிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொம்பேஸ்ட் பெரல்களை உற்பத்தி செய்வது ஒரே உற்பத்தியாளர் என்பதுடன், அவருக்கு கிடைத்துள்ள கட்டளைகளின் அளவுக்கு வழங்க முடியாமை இதற்கு காரணமாகவுள்ளது. |

**(இ)** நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட சுற்றறிகை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி சென்றடையக் கூடிய வகையில் முறையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், அதற்குத் தேவையான செயற்பாடுகள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் முறையான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி எனும் வசனம் குறிப்பிடப்படாத போதும்,அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விடயங்களை சபை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து இதுவரை செய்துள்ளது. |

(ஈ) ஈ- அரசு எண்ணக்கரு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | 2011 ஜுன் 24 திகதி SP/SB/06/11 இலக்க ஜனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட ஈ-அரசு கொள்கையுடன் தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம், தகவல் பரிமாறும் தொழிநுட்ப திட்டமொன்றை தயாரித்தல், கணனி மென்பொருள் தொகுகளின் தகவல்கள் சம்பந்தமான பாதுகாப்பு முறையொன்றை பின்பற்றுதல் மற்றும் தொகுதியை 03 மொழிகளிலும் பாவிக்கக் கூடியதாக நடாத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஈ - அரசு கொள்கைபடி,பிரமாணப் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | திட்டமொன்றை தயாரிக்க பிரதான நவீன பதவியொன்றை அங்கீகரிக்க மற்றும் பாதுகாப்பு முறைமை தொடர்பாக ஆவனப் பாதுகாப்பு திணைக்களத்திடம் வினவியுள்ளதுடன், 03 மொழிகளிலும் பாவிக்க எதிர்காலத்தில், எதிர்பார்கிறேன். |
| (ii) | ஈ - அரசு கொள்கை 11 பிரிவின் 020102 இலக்கம் பிரகாரம், அரச நிருவனத்தினால் மிலியன் 02 இற்கு மேற்பட்ட தகவல் பரிமாற்ற தொழிநுட்ப கருத்திட்டத்தை செயற்படுத்துகையில், தகவல் பரிமாற்ற தொழிநுட்ப முகவர் நிருவனத்தின் ஆதேலாசனையை பெற்று பொதுக் கொள்கைகளுக்கு இணங்கி செயற்பட வேண்டிய போதும், சபை செயற்படுத்திய கருத்திட்டங்களிற்காக மேல் குறிப்பிட்ட வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஈ - அரசு கொள்கை படி,மிலியன் 02 இற்கு மேற்பட்ட தகவல் பரிமாற்ற தொழிநுட்ப கருத்திட்டத்தை செயற்படுத்துகையில்,தகவல்பரிமாற்ற தொழிநுட்பமுகவர் நிருவனத்தின் ஆதேலாசனையை பெற்று பொதுக் கொள்கைகளுக்கு இணங்கி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில்,ICTA முகவரி ஒருவரை ஈடுபடுத்தி முன் நடவடிக்கைகளை மேற் கொள்ள எதிர்பார்க்கிறேன். |

3.2 முகாமைத்துவவினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிதி மோசடிக்கு குற்றவாளியான வாகன கட்டுப்பாட்டாளி ஒருவர் மீண்டும் சேவையில் நியமிக்கப்பட்டு வாகன கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு இணைக்கப்பட்டு, வாகன கட்டுப்பாட்டாளர் சேர்க்கும் பணம் பெறுதல் முதல் வங்கியிலிடல் வரை அனைத்து மேற்பார்வை வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | சரியான மேற்பார்வையின் கீழ் கடமை கையளிக்க வேண்டும். | பதவி விபரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதும், உணமையாக அவ்வாறு செய்வதில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தனியார் எரிபொருள் நிலையமொன்றுக்கு வழங்கப்பட்ட நீர் தொடர்பினூடாக மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 399,530 ஆன நிலுவை நீர் கட்டணத்தை அறவிட்டிருக்காததுடன், நீர் தொடர்பை துண்டிக்க அல்லது சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை நீர் கட்டணம் அறவிடுவது தொடர்பில் முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாவணையாளரை அறிவூட்டி நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | மத்திய சந்தை 162 இலக்க இறைச்சிக் கடையை ஒப்பந்தமின்றி 2016 ஜுன் 01 முதல் 2018 ஜுலை 31 வரையான காலத்திற்கு ரூபா 3,726,000 இற்கு டென்டர் வாடகை மீது வாடகை வழங்கப்பட்டிருந்தது. | இறைச்சிக் கடை வாடகைக்கு வழங்கும் போது, ஒப்பந்தம் கைச்சாத்திட வேண்டும். | 2016 ஆகஸ்ட் 30 திகதிக்கு பிடியாணை விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தத்திற்கான குறித்த கட்டணம் செலுத்தப்பட்டுளள போதும், ஒப்பந்தம் கைசாத்திட இது வரை வரவில்லை. |
| (ஈ) | நிர்மான அங்கீகாரம் கிடைக்காத கட்டிடமொன்றிற்கு மோசடியாக வரைந்த திட்டத்திற்கு மாநகர சபை அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்ததுடன்,கட்டிட திட்டத்திற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் இல்லாதிருந்ததால், நிர்மான வேலைகளை இடைநிருத்த அல்லது சட்ட நடவடிக்கையோ எடுத்திருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். | அனுமதியற்ற கடைகளை அகற்றலின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | திட்டத்தை அங்கீகரித்துக் கொள்ளாது 2015 ஆண்டில் கண்டி சிரிமாவோ பண்டாரநாயக மாவத்தையில், நிர்மானம் ஆரம்பிக்கப்பட்ட கட்டிடத்தின் மீளாய்வாண்டு இறுதியில் 07 மாடிகள் வரை நிர்மானிக்கப்பட்டு உள்ளதுடன், சபை உரிய நடவடிக்கை எடுக்காததால், தற்போது வழக்கு நடைமுறை ஒன்று ஏற்பட்டுள்ளது. | திட்டம் அங்கீகரிக்கப்படாத கட்டிடம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அக் கோவை செயற்படும் நிலையில் உள்ளது. |
| (ஊ) | அனுமதியற்ற நிர்மானங்கள் தொடர்பாக அறவிடப்பட்ட ரூபா 80,583,133 வை ஒப்பந்த பிரகாரம், கருத்திட்டத்தை நிறைவேற்ற பயன்படுத்தாது, நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த பிரகாரம் குறித்த பணம் கருத்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். | போகம்பர பொறுத்திருத்தல் பஸ் தரிப்பிட அருகிலுள்ள கடையறைகளை அகற்றி, மீண்டும் அக் கடையறைகளை அமைக்க மற்றும் நடைபாதை மேலும் வேலிகளை உரிய நியமத்தில் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (எ) | சுவசெவன தனியார் வைத்தியசாலைக்கு 2012 ஆகஸ்ட் மாதம் பொருத்தியிருந்த 3 அங்குல நீர் மாணிக்கு மதிலாக 1 1/2 அங்குல பழைய நீர் மாணிக்கு | சரியான மாணிக் கட்டணம் அறவிடுவது தொடர்பாக பின் ஆய்வொன்று | 3'' மாணிக்குரிய நிலுவை மாணிக் கட்டணம் மற்றும் அதற்குரிய வெட் பணத்திக் கூட்டுத் தொகை ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | பில்லிடப்பட்டதனால், 2012 செப்தம்பர் முதல் 2018 திசெம்பர் 31 வரை 06 ஆண்டுகளிற்கு கட்டணம் ரூபா 173,960 அறவிடப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட வேண்டும். | 173,960 யை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | கடுகஸ்தொட்ட பொது மக்கள் மலசலகூட பெண் ஒப்பந்தக்காரரிடமிருந்து 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்காக அறவிட வேண்டிய ரூபா 1,013,466 ஆன நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை கட்டணத்தை அறவிட வேண்டும். | 2017/2018 நிலுவை கட்டணம் தொடர்பாக முன் நடவடிக்கை மேற்கொள்ள சபையின் அங்கீகாரத்திற்கு சமர்பித்து தீர்மானமொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் நகர சபையில்439 வெற்றிடங்களும் 03 மிகையும் நிலவின. | வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | 248 வெற்றிடங்களிற்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியவெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | அருப்பள ஆயர்வேதத்திற்கு இணைக்கப்பட்டுள்ள பெண் ஔடத கலவையாளர் பிரதேச சபை அங்கத்தவராகையால், தொடர்ந்து கடமை விடுமுறை பெற்றுக் கொள்வதால், அருப்பள ஆயர்வேதத்தில் ஔடத விநியோகிக்க மற்றும் ஔடத இருப்பு பதிவேட்டை நாலாதுவரையாக நடாத்துவதில் தடை ஏற்பட்டுள்ளது. | கடமை வேலைகளை தடையின்றி மெற்கொள்ளக் கூடிய நபர்கள் அப் பதவிக்காக இணைககப்பட வேண்டும். | ஆண்டு விடுமுறைகளுக்கு மேலதிகமாக பிரதேச சபை அங்கத்தவராக இருப்பதனால்,32/91 (iii) பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் கடமை விடுமுறை உறித்தாகிறது. |
| (இ) | மாநகர சபையின் சட்ட அலுவலருக்கு மேலதிகமாக சட்ட ஆலோசகர் ஒருவர் இருக்கையில், சபையுடன் தொடர்புடைய வழக்குகளிற்கு வெளி வழக்கறிஞர்களுக்கு மீளாய்வாண்டு ஒக்டோகபர் வரை ரூபா 1,342,386 வழக்கறிஞர் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது | வெளிச் செலவுகள் குறையும் வகையில்நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறு நிருவனங்களுக்கு கிடைக்கும் சட்டத் திணைக்கள உதவி மாநகர சபைக்கு கிடைக்காததனால், முக்கிய கடமைகளிற்காக சேவையை பெற்றுக் கொண்டதாக அறிவிக்கிறேன். |

3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆண்டு முதல் 2018 வரை 1912 முச்சக்கர வண்டி உறிமையாளர்கள் | வருடாந்த ஆய்வொன்றை மேற் | நகர எல்லையில் முச்சக்கர வண்டி தரிப்பு வீதிக் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | பதிவுசெய்யப்பட்டு முச்சக்கர வண்டிகளில் ஒரு பகுதிக்கு மாத்திரம் வருடாந்த பில்லிடல் முறைமை ஒன்று பின்பற்றப்பட்டிருந்தது. | கொண்டு, முச்சக்கர வண்டி தரிப்பிட கட்டணம் வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டணம் பெற்றுக் கொடுத்தல் தனியார் நிருவனமொன்றிற்கு ஒப்படைத்திருப்பதால், கடுகஸ்தொட்டவில் 355 முச்சக்கர வண்டிகளிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டில் நீர் வீண்விரயம் முறையே கன மீட்டர் 5294832 மற்றும் 3312120 ஆகதில், முறையே ரூபா 105,896,640 மற்றும்ரூபா 66,242,400 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. நீர் வீண்விரயத்தை தடுக்க எவ்வித ஒழுங்கு முறையொன்றும் மேற் கொண்டிருக்கவில்லை. | நீர் வீண்விரயத்தால் ஏற்படும் நட்டத்தை குறைத்துக் கொள்ள ஒழுங்கு முறையொன்று பின்பற்றப்பட வேண்டும். | மாணி மோசடி மற்றும் பில்லிடல் தவறு காரணமாக, ஏற்படும் நீர் விரையத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

3.5 சொத்துக்கள் முகாமை

விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 130,000 பெறுமதியான 02மோட்டார் சைக்கில்கள் 05 ஆண்டுகள் முதல் மற்றும் 03 உளர் ஔடதம் வெட்டும் இயந்திரங்கள் ஓராண்டு காலமாக விலைவற்று நிலவன. | சபைக்கு சொந்தமாக ஆதனங்கள்விளைவற்ற/குறைபயன்பாட்டுடன் நிலவாது பேண நடவடிக்கைஎடுக்க வேண்டும். | பயன்படுத்த முடியாத 02 மோட்டார் சைக்கில்களை ஏலத்தில் விற்க மற்றும் 02 ஔடதம் வெட்டும் இயந்திரங்களை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 02 மருத்துவ தோணிகள் விலைவற்று நிலவன | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 மருத்துவ தோணிகளையும் ஒழுங்கான முறையொன்றை தயாரித்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொறியியல் சேவை 111 தர உத்தியோகத்தராக 2017 ஏப்ரல் 20 திகதி இலிருந்து கடமை ஆரம்பித்த உத்தியோகத்தர் ஒருவருக்கு உறித்தில்லாத கால எல்லையான 2015 பெரவாரி 24 முதல் 2017 ஏப்ரல் 17 வரையான காலத்திற்கு தொலை | படிகள் செலுத்தும் போது, சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கமைய சரியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | நியமன கடித ஏற்பாடுகள் பிரகாரம் படிகளும், முற்திகதியடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பேசி படியாக ரூபா 450,517 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2017 ஆண்டினுள், வெளித்தரப்பினருக்கு வழங்கல் பொருட்களுக்காக முன்னர் செலுத்தப்பட்ட ரூபா 3,195,706 மீதி மீளாய்வாண்டில் உம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெளித்தரப்பினருக்கு முற்பணம் செலுத்தலை குறைத்துக் கொள்ள வேண்டியதுடன், வழங்கப்பட்ட முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பின்னர் பதிலளிப்பதாக அறிவிக்கிறேன். |

3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் வீதவரி மென்பொருளை நிருவுவதற்கான பெறுகைகள் செயல் முறையை ஒழுங்காக செய்யாததனால், அறிவித்தலிற்காக 02 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்ட ரூபா 103,672 ஆன செலவு பயனற்ற செலவாக அவதானிக்கப்பட்டது. | பெறுகைகள் செயல் முறையை ஒழுங்காகபின்பற்ற வேண்டும். | முன்மாதிரி அரச நிருவனமொன்றிடம் வெற்றிகரமாக இக் கருமத்தை செய்து கொள்ளும் நோக்கில் செயற்பட்டுள்ளது. |

3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் ஒருவர் கல்வி சான்றிதலை மோசடியாக மாற்றி சமர்பித்தமை உறுதிப்படுத்தப்பட்ட போதும், அதற்கு ஒழுங்கு முறையொன்றை பின்பற்றாது, குறித்த உத்தியோகத்தரை குடும்ப சுகாதார சேவை 11 தரத்திற்கு தரமுயர்த்தி, 2008 சனவரி 01 முதல் 2017 ஜுலை 31 வரை ரூபா 3,130,652 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரனால் ஆரம்ப புலனாய்வொன்றை மேற்கொள்ள நகர ஆணையாளருக்கு சமர்பித்திருந்த போதும், 2018 ஒக்டோபர் 31 வரையும் அவ் ஆரம்ப புலனாய்வு மேற் கொள்ளப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண உள்ளூராட்சி ஆணையாளரனால் ஆரம்ப புலனாய்விற்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருப்பதால், மாநகர சபையினால் முன் நடவடிக்கை மேற்கொள்ள முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் வீதவரி, நானாவித வருமானம், நீர், களஞ்சியம், கணக்குகள் தயாரிப்பதுடன் தொடர்புடைய கணனி மென்பொருளை உருவாக்குவதற்கான விலை மணுக் கோரும் தொழிநுட்ப ஆய்வு அறிக்கைக்கு கைச்சாத்திடும் போது, குழு வெளியங்கத்தரான பேராதனை பல்கலைகழக விஞ்ஞான பீட பீடாதிபதியின் கையொப்பத்தை மோசடியாக இட்டு ரூபா 8,659,200 பெறுமதியான கணனி மென்பொருள் தொடர்பாக பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மோசடியாக கையொப்பம் இட்டுள்ளதனை ஏற்றுக் கொள்வதாகவும், இது தொடர்பில் ஆரம்ப புலனாய்வு மற்றும் பகுப்பாய்அறிக்கை மோசடிகள் மற்றும் ஊழல் விசாரணை நிருவனத்தினால் மேலும் பரிசீலிப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | கடுகஸ்தொட்ட நீர் குழாய் புதைக்கும் கருத்திட்டத்திற்காக தொடர்புடைய பொருட்களை பரீட்சிப்பதற்காகஇலங்கையிற்கு வெளியில் செலவிட விடு முறை கோருகையில் தனது வெளி நாட்டு பராமரிப்பு செலவினத்தை ஒப்பந்தக்காரர் பொறுப்பேற்பதாக விடய அமைச்சரிற்கும் ஆளுநரிற்கும் பொய்யான விபரங்களை குறிப்பிட்டு வெளி நாட்டு விடு முறையை அங்கீகரித்துக் கொண்டுள்ள போதும், வெளி நாடு செல்லும் அனைத்து செலவுகளையும் பொறியியல் மதிப்பீட்டின் உருப்படி 1.3 கீழ் ரூபா 1,500,000 தொகை உள்ளடக்கப்பட்டு 2018 ஏப்ரல் 04 திகதி ஒப்பந்த நிருவனத்திற்கு மாநகர சபை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | வெளி நாட்டுப் பயணம் அங்கீகரிக்கையில் நியம ஒடுங்கு முறையின் கீழ் மேற் கொள்ள வேண்டும். | அனைத்து செலவுகளும் ஒப்பந்த நிருவனத்தினால் பொறுப்பேற்கப்பட்டதுடன், அச் செலவு பில்லிடலிற்காக பிரமான பத்திரத்தில் உருப்படியொன்று உள்ளடக்கப்பட்டுள்ளதால், குறித்த கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

3.9 பெறுகைகள்

3.9.1 வழங்கள் மற்றும் சேவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் நானாவித வருமான மென் பொருள் தொகுதியை உருவாக்கல் | | |
| (i) | மென் பொருள் உருவாக்கத்தை பொறுப்பேற்ற நிருவனத்தால் தொகுதியின் ஒரு பகுதியை மாத்திரம் பூரணப்படுத்தி,கணனி மொழியை பாவிக்க முடியாமை, மென் பொருள் அபிவிருத்தி வசதிகள் இல்லாமை, மென் பொருள் புதிய திருத்தங்களுடன் | ஒப்பந்த பிரகாரம் மென் பொருளை உருவாக்கிக் கொண்ட நிருவனத்தினூடாக மென் பொருளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை | மென் பொருளை தொடரந்தும் நடாத்திச் செல்ல வேண்டியதனால்,அந்நிருவனத்தில் சேவையாற்றிய மென் பொருள் பொறியியலாளரின் உதவியை பெற்று இலக்கம் 8 (131) மற்றும் 2018.12.20 |

| | | | |
|---|---|---|---|
| | நாலாவதுவரையாகாமை போன்ற பல செயற்பாட்டு குறைபாடுகள் இருக்கையில், மாநகர சபைக்கு வழங்கியிருந்த இரண்டு தொழில் நுட்ப அலுவலர்களையும் அகற்றி ஏனைய மென் பொருள் அபிவிருத்தி நடவடிக்கைகளை கைவிட்டு 2018 நவம்பர் அளவில் சேவை நடவடிக்கைகளிலிருந்து வெளியாகியிருந்தது. | பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். | திகதிய சபை ஒருமைபாட்டின் கீழ் ஒப்பந்தத்தை அவரகளுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதி வளம்மிக்க நிருவனங்களிடம் விலை மணு கோர நிபந்தனை விதிக்கப்பட்டுள்ள போதும், மற்றும் முற்பணம் செலுத்த வேண்டிய தேவையில்லாத போது, சேவை வழங்குனருடன் ஒப்பந்தம் கைச்சாத்திட 08 மாதங்களுக்கு முன் ரூபா 2,357,760 ஆன முற்பணம் ஒப்பந்த நிருவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | நிதி வளம்மிக்க மணுதாரரூடாக கொள்வனவு செய்யும் நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பின், முற்பணம் வழங்கக் கூடாது. | திறைசேரி 2017 செப்தம்பர் அளவில் நிதி வழங்குவதை மட்டுப்படுத்தியுள்ளதால்,அவர் களுக்கு முற்பணம் கோரும் தேவைப்பாடு ஏற்பட்டிருந்தாமை காரணமாக, செலுத்தப்பட்டது. |
| (ஆ) | மாநகர சபை பிரிவுகனைத்தையும் ஒரே வலையமைக்குட்படுத்தும் கருத்திட்டம் | | |
| (i) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் மாநகர சபை துணை விதி பிரகாரம் செயற்படாது, மேல் வலையமைக்குட்படுத்தும் கருத்திட்டத்தை ஒப்படைத்த நிருவனத்திற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தினத்திற்கு 02 மாதங்களுக்கு முன் ரூபா 2,192,443 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | முற்பணம் வழங்கும் போது, சுற்றறிக்கை மற்றும் ஆலோசனைகளை சரியாக பின்பற்றவேண்டும். | லங்கா லொஜிஸ்டிக் நிருவனத்திற்கு திறைசேரியால் தேவையான அளவு நிதி வழங்கலை மட்டுப்படுத்தியிருந்ததால், அவர்களால் கடன் பத்திரத்தை திறந்து தொழிநுட்ப உதிரிப்பாகங்களை நகர சபைக்கு அழைப்பிக்க தேவையான பணம் ஒப்பந்த தொகையின் 30% சதவீதமாக வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | கருத்திட்ட மணு பதிவேட்டின் பிரகாரம், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த தொகையில் ரூபா 730,814 அல்லது, 10 சதவீதத்திற்கு செயலாற்றுகை காப்பொன்று பெற்றுக் கொள்ள வேண்டிய போதும்,ரூபா 365,407 அல்லது 05 சதவீதத்திற்கு மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | மணு பதிவேட்டின் பிரகாரம்,செயலாற்று கை காப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். | முழு நேர அரச நிருவனமாகையால், 10% ஆன செயலாற்றுகை காப்பொன்றை பெற்றுக் கொள்ளாது சேவையின் கீழ் 5% ஆன செயலாற்றுகை காப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. |
| (இ) | நீர் மாணி கொள்வனவு | | |
| | சபை நீர் மாணி கொள்வனவு செய்கையில், நீர் வேலை | நீர் மாணிகள் கொள்வனவு செய்ய | மாணிகள் கொள்வனவு செய்ய நீர் வேலை |

| | | |
|---|---|---|
| பொறியியலாளரின் பரிந்துரையின் கீழ் உச்ச விலை முன்வைத்த வழங்குனரிடமிருந்து ரூபா 400,786 தொகைக்கு மி.மி 20 மற்றும் மி.மி 25 அளவிலான 40 நீர் மாணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | முன் மாதிரி பரிசீலனை செய்தல் அத்தியவசியம் என மற்றும் உச்ச விலை மணுவை பெற்றுக் கொள்வதற்கான நியாயமான காரணங்களை விளக்க வேண்டும். | பொறியியலாளரின் முன் அனுபவம் மற்றும் அறிவின் பரிகாரம்,கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால், காரணத்தை தெளிவுபடுத்தல் விடுபட்டுள்ளது. பொறியியலாளரின் முன் அனுபவத்தை கொண்டு மாதிரிகளின் தரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

3.9.2 ஒப்பந்த நிரவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | கண்டி இலிருந்து கடுகஸ்தொட்டை வரை பிரதான நகரை அன்மித்து நீர் குழாய் புதைக்கும் வேலையை ரூபா 210,528,076 பெறுமதிக்கு 2016 ஆண்டில், ஒப்பந்த நிருவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான கணக்காய்வு பரிசோரனையின் போது, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | மேல் கருத்திட்டத்தை மாகா பொறியியல் நிருவனத்திற்கு வழங்க வேண்டும் என நீர் வேலை பொறியியலாளர் முன்மொழிந்தமை மற்றும் இறுதியில் ரூபா 210,528,076 பெறுமதிக்கு மாகா பொறியியல் நிருவனத்திற்கு கருத்திட்டத்தை வழங்கியருந்தமையால், பெறுகைகள் நடைமுறை வெளிப்படைத் தன்மையின்றி செயற்படுத்தப்பட்டிருந்தது. | பெறுகைகள் நடைமுறையை பின்பற்ற வேண்டும். | இது முற்திட்டம் ஒன்றல்லாததுடன், உடனடியாக செயற்படுத்த வேண்டிய வேலை ஒன்றாகையால், மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தெறியப்படுத்துவது நீர் வேலை பொறியியலாளரின் பொறுப்பாகையால், அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (அ) ii இற்கு மாற்றமாக ஒப்பந்தக்காரருக்கு குறித்த அளவுத்திட்டத்தை தயாரித்து மற்றும் பரிந்துரைத்து பிரதான நகர பொறியியலார் மற்றும் நீர் வேலை பொறியியலாளர் தொழிநுட்ப மதப்பீட்டு குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவராக செயற்பட்டுள்ளனர். | குறித்த குழு அங்கத்தவர்கள் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | தொழிநுட்ப மதப்பீட்டு குழுவின் பெரும்பான்மை இவ் இரு அலுவலர்களிற்கு வெளிவாரியாக நிலவியமையால், சுயாதீன மதிப்பீடொன்று இடம் பெறுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பெறுகைகள் வழிகாட்டிக்ஆகாவையின் 2.8.1 (அ) பிரிவு பிரகாரம், எந்தவொறு அங்கத்தவரும் தொழிநுட்ப மதப்பீட்டு குழு மற்றும் பெறுகைகள் குழு ஆகிய இரண்டிலும் அங்கத்தவராக சேவையாற்ற கூடாது என குறிப்பிட்டிருக்கையில் பிரதான நகர பொறியியலாளர், பிரதான கணக்காளர் மற்றும் கணக்காளர் (வருமானம்) ஆகியோர் தொழிநுட்ப மதப்பீட்டு குழு மற்றும் பெறுகைகள் குழு அங்கத்தவராக சேவையாற்றியுள்ளனர். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | நகர அலுவலர்கள் சார்பாக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகார ஒப்படைப்பு பிரகாரம், அவர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை கருத்திற் கொண்டு நகர ரீதியாக மேற்கொள்ள வேண்டிய வேலைகள் மற்றும் கடமைகளை இயக்குவதற்கு உள்ள அலுவலர்களை போதியதாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. |
| (iv) | 2013 ஆண்டில் ரூபா 123,859,887 தொகைக்கு தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டிற்கு 2016 டென்டரை அடிப்படையாகக் கொள்ளாது,2013 ஆண்டின் மதிப்பீட்டிற்கு 30 சதவீதமான ரூபா 37,157,966 அதிகரித்து,2016 ஆண்டின் மதிப்பீட்டை ரூபா 161,017,853 ஆக தயாரிக்கப்பட்டுள்ளது. | குறித்த ஆண்டு வீதங்களின் பிரகாரம்,மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும். | வருடாந்தம் 10 சதவீதப் படி 03 வருடங்களுக்கு 30 சதவீதம் அதிகரித்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. |